Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், ஜனவரி 28, 2025 | இதழ் 290

# தேவபூமியான உத்தராகண்ட் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தியிருப்பது நல்ல அறிகுறி ஆகும் - குடியரசு துணைத்தலைவர்



சென்னை, 28 ஜனவரி 2025: உத்தராகண்ட் மாநிலம் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தியிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர், இன்றைய நாள் புனிதமானது என்று கூறினார்.

மாநிலங்களவை உள்ளகப் பயிற்சித் திட்டத்தின் நூந்தாவது தொகுதி பங்கேற்பாளர்களுக்கான தொடக்க நிகழ்ச்சிக்கு குடியரசுத் துணைத் தலைவர் தலைமை தாங்கினார். குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற உள்ளகப் பயிற்சித் திட்டத்திற்கான இணைய தளத்தையும் குடியரசு துணைத்தலைவர் தொடங்கி வைத்தார்.

மாநிலங்களவை உள்ளகப் பயிற்சி திட்டத்தில் பங்கேற்றவர்களிடையே உரையாற்றிய திரு தன்கர், இன்று ஒரு நல்ல அறிகுறி ஏற்பட்டுள்ளதாகவும், அது மங்களகரமான அடையாளம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு சட்டத்தை இயற்றியவர்கள் அரசியலமைப்பில், குறிப்பாக பகுதி 4-ல் அரசு கொள்கைகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக வழிகாட்டியுள்ளனர். இந்த நெறிமுறைக் கோட்பாடுகளை அடைய அரசு கடுமையாக உழைக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 44-ன்படி நாடு முழுவதும் குடிமக்களைப் பாதுகாக்க ஒரே மாதிரியான பொது சிவில் சட்டத்தை கொண்டு வர வகை செய்கிறது என்று யூரிவித்தார்.

நாம் அனைவரும் இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கிறோம். தேவபூமி உத்தரகண்ட் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தியுள்ளதற்காக அந்த அரசின் தொலைநோக்குப் பார்வையைத் தாம் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டார். நாடு முழுவதும் இந்த சட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக குடியேறியவர்களால் ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தலை சுட்டிக்காட்டிய திரு தன்கர், இவ்வாறு குடியேறிய லட்சக்கணக்கானவர்கள் தேசத்திற்கு சவாலாக உள்ளனர் என்றார்.

அவர்கள் நமது மக்களுக்கான வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர் என்பதால், அரசில் உள்ள ஒவ்வொருவரும் இது குறித்து தீவிரமாக பரிசீலிக்க வேண்டும் என்று தாம் எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

# 76-வது குடியரசு தினம்: தொழில்முனைவோர் 100 பேரை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி கௌரவித்தார்



சென்னை, 28 ஜனவரி 2025: 76-வது குடியரசு தினத்தையொட்டி, மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை, கல்வித்துறை இணை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி, திறன் மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் 100 புகழ்பெற்ற தொழில்முனைவோரின் சாதனைகளைப் பாராட்டினார். மத்திய அரசால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த இந்த தொழில்முனைவோர்கள் திறன் இந்தியா இயக்கத்தின் கீழ், நாட்டின் வளர்ச்சி மற்றும் புதுமைகளை முன்னெடுப்பதில் ஆற்றிய முக்கிய பங்கை அங்கீகரித்து, குடியரசு தின அணிவகுப்பில் சிறப்பு விருந்தினர்களாகக் கௌரவிக்கப்பட்டனர்.

டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றம் - 2025 கூட்டத்தில் பங்கேற்றிருந்த அமைச்சர் திரு சவுத்ரி, உலக வர்த்தகத் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல்களின் போது தமக்கு கிடைத்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

"இந்தியாவின் திறமையான பணியாளர்கள் மகத்தான உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்று வருவதாகவும் நமது திறமை பரவலாக பாராட்டப்படுவதாகவும் அவர் கூறினார். டாவோஸில் நடந்த விவாதங்களில் நிலைத்தன்மை, செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் மகளிர் தலைமையிலான வளர்ச்சி ஆகியவை கவனம் பெற்றதாக அவர் தெரிவித்தார்.

354 பில்லியன் டாலர் மதிப்பிலான 118 யூனிகார்ன்களுடன் இந்தியாவின் புத்தொழில் அமைப்பு உலகின் மிகப்பெரியதாக உள்ளது என்று குறிப்பிட்ட அவர், இந்த வெற்றி தொலைநோக்கு கொள்கைகள், பயனுள்ள செயலாக்கம் மற்றும் தொழில்முனைவோரால் இயக்கப்படுகிறது என்று கூறினார். 63 மில்லியன் நிறுவனங்களை உள்ளடக்கிய, 11 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30% மற்றும் ஏற்றுமதியில் 45% பங்களிப்பு செய்யும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறையின் முக்கிய பங்களிப்பு குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், திறன் இந்தியா இயக்கத்தின் மாற்றத்தக்க தாக்கம் குறித்தும், இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பது, தன்னம்பிக்கையை வளர்ப்பதில் அதன் பங்களிப்பு குறித்தும் எடுத்துரைக்கப்பட்டதாகவும் திரு ஜெயந்த் சவுத்ரி கூறினார்.

திறன்மிக்க பண்புடன் இந்தியாவின் நற்பெயரை மேம்படுத்தியதற்காக தொழில்முனைவோர்களை அவர் பாராட்டினார். இந்த தேசியக் கொண்டாட்டத்தில் 100 தொழில்முனைவோர்கள் பங்கேற்பது நமது திறன் முயற்சிகளின் தாக்கத்தை சுட்டிக்காட்டுகிறது என்று அவர் தெரிவித்தார். இந்த திட்டங்கள் நாடு முழுவதும் தனிநபர்களுக்கு அதிகாரம் அளித்து, நிலையான வாழ்வாதாரங்களை உருவாக்கி, தொழில்முனைவோர்களின் பயணங்கள் போல் தாமும் தொடர மற்றவர்களை ஊக்குவித்துள்ளன என்று அவர் கூறினார்.

"ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், உத்தராகண்ட், சத்தீஸ்கர், வடகிழக்கு மாநிலங்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இந்த தொழில்முனைவோர்களின் கடின உழைப்பை அவர் எடுத்துரைத்தார். ஏவிஐடி கல்வி நிறுவனத்தில் மின்சாரம் மற்றும் மின்னணுவியல் துறையில் பட்டம் பெற்ற ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ராம்கரில் வசிக்கும் ரிதேந்திர பிரசாத் என்ற தொழில்முனைவோருக்கு சிறப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

# இந்தியாவின் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு வாழ்த்து தெரிவித்த பிரான்ஸ் அதிபர் மற்றும் அயர்லாந்து பிரதமருக்கு பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்



சென்னை, 28 ஜனவரி 2025: இந்தியாவின் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு வாழ்த்து தெரிவித்த பிரான்ஸ் அதிபர் திரு இம்மானுவல் மேக்ரோன், அயர்லாந்து பிரதமர் திரு மைக்கேல் மார்ட்டின் ஆகியோருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபரின் எக்ஸ் தள பதிவுக்கு பதிலளித்து திரு மோடி கூறியிருப்பதாவது:

"எனதருமை நண்பர், அதிபர் இம்மானுவல் மேக்ரோன் அவர்களே இந்தியாவின் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு உங்களின் அன்பான வாழ்த்துகள் மிகவும் பாராட்டத்தக்கவை. கடந்த ஆண்டு இதே நாளில் நீங்கள் பங்கேற்றது நமது அரசுகள் ரீதியான கூட்டாண்மை மற்றும் நீடித்த நட்புறவின் உச்சகட்டமாகும். மனிதகுலத்தின் சிறந்த எதிர்காலத்திற்காக நாம் ஒன்றிணைந்து செயல்படுவதால், பாரிஸில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு செயல்திற உச்சி மாநாட்டில் விரைவில் சந்திப்போம்."

அயர்லாந்து பிரதமர் வெளியிட்ட எக்ஸ் தள பதிவுக்கு பதிலளித்து திரு மோடி கூறியிருப்பதாவது:

"பிரதமர் மைக்கேல் மார்ட்டின் அவர்களே, உங்கள் அன்பான வாழ்த்துகளுக்கு நன்றி. ஜனநாயகத்தின் மீதான பகிரப்பட்ட நம்பிக்கை அடிப்படையில், இந்தியா - அயர்லாந்து இடையேயான நீடித்த நட்புறவு வரும் காலங்களில் தொடர்ந்து வலுப்பெறும் என்று நான் நம்புகிறேன்."

# இலங்கை கடற்படையினர் தொடர் அட்டூழியம்; 33 தமிழக மீனவர்கள் கைது: 3 படகுகள் பறிமுதல்



சென்னை, 28 ஜனவரி 2025: தமிழக மீனவர்கள் 33 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். "ாமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 439 விசைப்படகுகள் அனுமதி சீட்டு பெற்று நேற்று மீன்பிடிக்க கடலுக்குச் சென்றன. இன்று அதிகாலை வடக்கு மன்னார் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ரூபில்டன், டேனியல், சச்சின் ஆகியோருக்குச் சொந்தமான மூன்று விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டிய குற்றச்சாட்டின்பேரில் கைப்பற்றினர்.

படகுகளிலிருந்த ரூபில்டன், கிறிஸ்டோபர், ஜான், ரீகன், பாலாஜி, இன்னாசி, கிரின்சன், நம்பு மணி, செந்தில் குமார், சார்லஸ் மிரண்டா, டேனியல், ஆகாஷ், வினிஸ்டன், அண்ணாதுரை, ஸ்டாலின், சீனிவாசன், ஸ்டெல்லஸ், செந்தூர் பாண்டி, ஏனோக், ஜெயபால், வீரபாண்டி, சுரேஷ், அந்தோணி, சூசை, சிவசங்கர், குணசேகரன், முத்து, அபிஸ்டன், சந்தோஷ், ரேமிஸ்டன், மேக்மில்லன், ஆரோக்கிய ஜோபினர், அகரின் ஆகிய 33 மீனவர்களை கைது செய்தனர். 33 மீனவர்களையும் கடற்படை முகாமிற்கு கொண்டு சென்ற இலங்கை கடற்படையினர் அந்நாட்டு மீன்வளத்துறையினரிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து 33 தமிழக மீனவர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட உள்ளனர். கடந்த இரண்டு வாரத்தில் மட்டும் 51 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஹரிமன் சர்மாவுக்கு பத்மஸ்ரீ விருது : இந்தியாவின் ஆப்பிள் மனிதர்



சென்னை, 28 ஜனவரி 2025: இந்திய விவசாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பங்களித்தற்காக இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி திரு ஹரிமன் சர்மாவுக்கு நாட்டின் மிக உயரிய விருதான பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. எச்.ஆர்.எம்.என் - 99 என்று பெயரிடப்பட்டுள்ள ஒரு புதுமையான, சுய மகரந்தச் சேர்க்கை, குறைந்த குளிர்நிலை கொண்ட ஆப்பிள் வகையை அவர் உருவாக்கினார். இது நாட்டில் ஆப்பிள் சாகுபடியில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. சாகுபடிக்கு உகந்த, குறைந்த விலையிலான சாறு அதிகம் நிறைந்த ஆப்பிள் வகை இதுவாகும்.

மிதமான தட்பவெப்பநிலை, குளிர் அதிகம் உள்ள பிரதேசங்களில் விளையும் ஆப்பிள் வகைகளை போன்று அல்லாமல், இந்த புதிய ஆப்பிள் வகை வெப்பமண்டல, துணை வெப்பமண்டல மற்றும் சமவெளி பகுதிகளில் நன்கு வளரக்கூடியது. கோடைகாலத்தில் நிலவும் 40-45 டிகிரி செல்சியஸ் வரையிலான வெப்பநிலையையும் தாங்கி வளரக்கூடியது.

குழந்தைப் பருவத்தில் ஆதரவற்ற நிலையில் வளர்ந்த ஹரிமன் ஷர்மா, பிலாஸ்பூரில் (இமாச்சலப் பிரதேசம்) அமைந்துள்ள தனது சிறிய குக்கிராமமான பனியாலாவின் மலைப்பாங்கான பகுதிகளில் இருந்து குடியரசுத் தலைவர் மாளிகை வரையிலான அவரது பயணம் விவசாயிகள் மட்டுமின்றி, மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தோட்டக்கலை நிபுணர்கள் ஆகியோருக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் உள்ளது.

இந்தப் புதிய ஆப்பிள் வகையானதுா வீட்டு நுகர்வுக்கு பயன்படுத்தப்படும் நிராகரிக்கப்பட்ட ஆப்பிள் வகைகளிலிருந்து சில விதைகளை நடவுசெய்தபோது இந்த புதிய ஆப்பிள் வகை கண்டறியப்பட்டது.

திரு. ஹரிமன் ஷர்மாவின் தனித்துவமான கண்டுபிடிப்பு இந்தியாவில் ஆப்பிள் சாகுபடியில் மாற்றத்தை ஏற்படுத்தியதுடன், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தையும் அளித்துள்ளது. மேலும் இது சிறந்த ஊட்டச்சத்து உணவாகவும் உள்ளது. அவரது முயற்சியால், ஒரு காலத்தில் பணக்காரர்களின் உணவாக கருதப்பட்ட ஆப்பிள் சாமானிய மக்களுக்கும் கிடைக்கும் வகையில் மலிவான விலையில் கிடைக்கிறது. பத்மஸ்ரீ விருது மூலம் அவரது முயற்சிகளுக்கு கிடைத்த அங்கீகாரம், விவசாயம் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதிலும், நீடித்த வாழ்வாதாரங்களை உருவாக்குவதிலும், நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளுடன் இணைந்து அமையும் கண்டுபிடிப்புகளுக்கான சான்றாக திகழ் கிறது.

# மக்கள் நீதி மய்யம் கட்சி அலுவலகத்தில் குடியரசு தினம் கொண்டாட்டம்.



சென்னை, 28 ஜனவரி 2025: மக்கள் நீதி மய்யம் கட்சியின் மாநில தலைமை அலுவலகத்தில், இந்தியாவின் 76-வது குடியரசு தினம் இன்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கட்சியின் துணைத் தலைவர் திரு. ஏ,ஜி.மௌரியா ஐபிஎஸ் (ஓய்வு பெற்றவர்)) அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்வில், மக்கள் நீதி மய்யம் நற்பணி அணி மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. ஜி.நாகராஜன், மாநிலச் செயலாளர் திரு. அர்ஜுனர், மாநில செயற்குழு உறுப்பினர் திருமதி சினேகா மோகன்தாஸ் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் திரு. மாறன், திரு. கோமகன், திரு. ஓம் பிரகாஷ், திரு. ஜே.கதிர், உள்ளிட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள், நம்மவர் தொழிற்சங்கப் பேரவையின் மாநில நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நம்மவர் தொழிற்சங்கப் பேரவையின் மாநில துணை ஒருங்கிணைப்பாளர் திரு. கே.மாடசாமி, மாநில துணைச் செயலாளர் திரு. வி.யுவராஜ், வட்டச் செயலாளர் திரு. ஃப்லாய்ட் டி.க்ரூஸ்

# கோடம்பாக்கம் பகுதியில் நடந்து சென்ற பெண்ணிடம்தங்க செயின் பறித்துச் சென்ற நபர் கைது. 3 சவரன் தங்க செயின் பறிமுதல்.



சென்னை, 28 ஜனவரி 2025: சென்னை, கோடம்பாக்கம், தாஸ்புரத்தில் வசித்து வரும் அன்புகனி, பெ/வ-52, க/பெ.கிருஷ்ணமூர்த்தி என்பவர் வீட்டு வேலைகளை செய்து வருகிறார். இவர் 25.01.2025 அன்று இரவு, வேலை முடித்து, கோடம்பாக்கம், வரதராஜபேட்டை & ஆரோக்கியசாமி தெரு சந்திப்பில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த ஒரு வாலிபர் மேற்படி அன்புகனி கழுத்தில் அணிந்திருந்த 3 சவரன் தங்க செயினை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றார்.

இது குறித்து அன்புகனி ஆர்-2 கோடம்பாக்கம் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆர்-2 கோடம்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி செயின் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட வெங்கடேஷ், வ/23, த/பெ.சுந்தர்ராஜ், நாயுடு தெரு, வெங்கடேஷ்வரபுரம், கே-சண்முகபுரம், தூத்துக்குடி மாவட்டம் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் 3 சவரன் தங்க செயின் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட வெங்கடேஷ் வேளச்சேரி, எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் தங்கியிருந்து, தனியார் மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்து வருவது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி வெங்கடேஷ் விசாரணைக்குப் பின்னர் 26.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

# பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்ற 14 வது பட்டமளிப்பு விழா



சென்னை, 28 ஜனவரி 2025: பி.எஸ்.அப்துர் ரஹ்மான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் தனது 14வது பட்டமளிப்பு விழாவை இன்று அதன் வளாகத்தில் நடத்தியது. பட்டமளிப்பு விழாவில் 59 முனைவர் பட்டம், 708 முதுநிலை மற்றும் 1751 இளநிலை பட்டதாரிகள், 1751 பேர் பட்டம் பெற்றனர்.

முதல் இடங்களைப் பெற்ற 65 மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. இதில், 38 மாணவர்கள் இளங்கலை பட்டமும், 27 மாணவர்கள் முதுகலை பட்டதாரியும், 687 மாணவர்கள் நேரிலும், 1830 மாணவர்கள் ஆன்லைன் மூலமாகவும் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டனர். மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் எஸ்.டி.க்யூ.சி இயக்குநரகத்தின் தலைமை இயக்குநர் திரு.எம்.வெள்ளைப்பாண்டி மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் பி.எஸ்.ஏ.சி.எஸ் வேந்தர் திருமதி குர்ரத் ஜமீலா, இணை வேந்தர் திரு.அப்துல் காதிர் ஏ.ரஹ்மான் புஹாரி, துணைவேந்தர் டாக்டர் த.முருகேசன், இணை துணைவேந்தர் டாக்டர் என்.தாஜுதீன், பதிவாளர் டாக்டர் என்.ராஜா ஹுசைன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பிரதம விருந்தினர்

சிறப்பு விருந்தினர் திரு.எம்.வெள்ளைப்பாண்டி ஆற்றிய பட்டமளிப்பு உரை

மு.வெள்ளைப்பாண்டி - தலைமை இயக்குநர், எஸ்.டி.க்யூ.சி இயக்குநரகம், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், இந்திய அரசு.

ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பட்டமளிப்பு விழாவில், இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் எஸ்.டி.க்யூ.சி இயக்குநரகத்தின் இயக்குநர் ஜெனரல் திரு. எம். வெள்ளைபாண்டி, பட்டம் பெறும் வகுப்பினருக்கு ஊக்கமளிக்கும் மற்றும் சிந்தனையைத் தூண்டும் உரையை நிகழ்த்தினார். அவரது வார்த்தைகள் பட்டதாரிகளுடன் ஆழமாக எதிரொலித்தன, அவர்கள் தங்கள் தொழில்முறை பயணங்களை வழிநடத்தும்போது அவர்களுக்கு வழிகாட்டும் விலைமதிப்பற்ற பிரதிபலிப்புகளை வழங்கின.

எதிர்பாராதவற்றைத் தழுவுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த திரு வெள்ளைபாண்டியின் உரை, வாழ்க்கையில் தவிர்க்க முடியாத சவால்கள் மற்றும் மாற்றங்கள் வளர்ச்சிக்கான வாய்ப்புகளாக பார்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். பட்டம் பெற்றவர்கள் வளர்ச்சி மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு, நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ளும் திறனுடன் இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மாணவர்கள் தங்கள் "வடக்கு நட்சத்திரத்தை" கண்டறிய அவர் மேலும் ஊக்குவித்தார், இது அவர்களின் முடிவுகளை வடிவமைக்கும் மற்றும் அவர்களின் லட்சியங்களை இயக்கும் வழிகாட்டும் நோக்கம் மற்றும் கொள்கைகளின் தொகுப்பு. தங்கள் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை இலக்குகளில் தெளிவுடன் கவனம் செலுத்துவதன் மூலம், உலகின் சவால்களை எதிர்கொள்ளவும் அர்த்தமுள்ள மாற்றத்தை உருவாக்கவும் அவர்கள் சிறந்த முறையில் தயாராக இருப்பார்கள்.

வெள்ளைப்பாண்டி தனது நிறைவுரையில், "சுவர்களை அல்ல, பாலங்களைக் கட்டுங்கள்" என்ற சக்திவாய்ந்த செய்தியைப் பகிர்ந்து கொண்டார். ஒத்துழைப்பு மற்றும் கூட்டு முயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், சமூகத்திற்கு பயனளிக்கும் தீர்வுகளுக்கு பங்களிக்கவும், அவர்களைச் சுற்றியுள்ளவர்களை உயர்த்தவும் பட்டதாரிகள் பங்களிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பட்டதாரிகளின் தொழில் வாழ்க்கையில் புதிய உயரங்களை எட்டுவதற்கு தொடர்ச்சியான கற்றலும் வளர்ச்சியும் முக்கியம் என்பதை நினைவுபடுத்திய அவர், கற்றல் மற்றும் வளர்ச்சியை ஒருபோதும் நிறுத்தக்கூடாது என்று வலியுறுத்தினார்.

விழா நம்பிக்கை மற்றும் உற்சாகத்தின் உணர்வுடன் முடிவடைந்தது, ஏனெனில் பட்டதாரிகள் ஒத்துழைப்பு மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் உணர்வுடன் உலகிற்கு பங்களிக்க ஊக்கமளித்தனர்.

சிறப்பு விருந்தினர்கள்:

ரங்கராஜன் ராகவன், ஹெச்சிஎல் இன்போசிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முன்னாள் எம்.டி. பிஎஸ்ஏ கிரசண்ட் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜியின் 14வது பட்டமளிப்பு விழாவில் ஹெச்சிஎல் இன்ஃபோசிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநர் திரு ரங்கராஜன் ராகவன் முன்னிலையில் கௌரவிக்கப்பட்டார், அவர் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் எதிர்கால போக்குகள் குறித்த தொலைநோக்கு மற்றும் நுண்ணறிவு உரையை வழங்கினார்.

# இம்டெக்ஸ் 2025 இல் சீமென்ஸ் இந்தியா மெசினம் ஐ அறிமுகப்படுத்துகிறது: இயந்திர கருவி செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையை வழங்குகிறது





சென்னை, 28 ஜனவரி 2025: இம்டெக்ஸ் 2025 இல் இந்திய இயந்திர கருவித் துறையின் வேகம், விரைவியக்கம் மற்றும் நீடித்திருக்கும் திறனை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு புதுமையான டிஜிட்டல் மயமாக்கல் போர்ட்ஃபோலியோவான மெசினம் ஐ சீமென்ஸ் இந்தியா அறிமுகப்படுத்தியது. மெசினம் அமைவு நேரத்தை 20%* வரை குறைக்கும் திறனையும், சுழற்சி நேரங்கள் மற்றும் ஆற்றல் நுகர்வை 18%** வரை குறைக்கும் திறனையும் கொண்டுள்ளது.

உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு சேவை செய்யும் தரமான உற்பத்தி பிளீவுகளால் இந்தியாவில் முதலீடு அதிகரித்து வருவதால், இந்திய இயந்திர கருவி சந்தை குறிப்பிடத்தக்க டிஜிட்டல் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது, இந்த வளர்ச்சியை ஆதரிக்க மேம்பட்ட தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் இது இயக்கப்படுகிறது. அதிநவீன இயந்திர கருவிகளுக்கான தேவை, உயர் துல்லியம், தனிப்பயனாக்கம் மற்றும் உற்பத்தி செயல்முறைகளில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்கான தேவையால் தூண்டப்படுகிறது.

சீமென்ஸ் ஏஜி-இன் டிஜிட்டல் இண்டஸ்ட்ரீஸின் சீமென்ஸ் மோஷன் கன்ட்ரோலின் சிஇஓ அச்சிம் பெல்ட்ஸ் கூறுகையில் "முழு மதிப்புக்கூட்டுத் தொடரிலும் ஒருங்கிணைந்த தீர்வுகளைக் கொண்ட தொழில்நுட்பத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் ஒருவராக, டிஜிட்டல் மயமாக்கலை விரைவாக ஏற்றுக்கொள்வதை ஆதரிப்பதும், கூட்டு உருவாக்கம் மூலம் தொழில்துறை மதிப்புக்கூட்டு தொடரை உயர்த்த உதவுவதும் எங்கள் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்றாகும்.

மெசினம் போர்ட்ஃபோலியோ அறிமுகப்படுத்துவதன் மூலம், இந்தியாவில் இயந்திரக் கருவி உற்பத்தி சுற்றுச்சூழல் அமைப்பின் நிலையான, டிஜிட்டல் மற்றும் எதிர்காலத்திற்கு-ஏற்ற மாற்றத்தை நாங்கள் வடிவமைக்கிறோம்" என்று கூறினார்.

மெசினம் என்பது மென்பொருள் மற்றும் ஐஓதி-இயக்கப்பட்ட வன்பொருள், கூட்டாளர்களின் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் ஒரு சந்தையை உள்ளடக்கிய திறந்த டிஜிட்டல் வணிக தளமான சீமென்ஸ் எக்ஸ்செலரேட்டரின் ஒருங்கிணைந்த பகுதியாகும். மெசினம் உடன், இயந்திர கருவி துறையில் உள்ள நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் வடிவமைப்பு இரண்டிலும் டிஜிட்டல் மாற்றத்தை எளிதாகவும், வேகமாகவும், அளவிடக்கூடியதாகவும் மாற்ற முடியும்.

சீமென்ஸ் மேம்படுத்தப்பட்ட 5வது ஜெனரேஷன் சினுமெரிக் 828டிஐயும் காட்சிப்படுத்தும், இது சினுமெரிக் ரன்மை விர்சுவல் மெஷினுக்கு வழி வகுக்கும். இந்த புதுமையான அம்சம், உற்பத்தியை பாதிக்காமல், உண்மையான இயந்திரத்தில் அமைவு நேரத்தை 20% வரை குறைத்து மற்றும் உற்பத்தி அபாயங்களைக் குறைத்து இயந்திரத்தின் டிஜிட்டல் ட்வினைப் பயன்படுத்தி என்சி நிரல்களை உருவாக்க, சரிபார்க்க மற்றும் மேம்படுத்த அனுமதிக்கிறது.

டிஜிட்டல் ட்வின் தயார்நிலை, எளிதான எச்எம்ஐ தனிப் பயனாக்கம் மற்றும் 40% வேகமான நிரல் இடையகப்படுத்தல் போன்ற அதிநவீன அம்சங்களுடன், இது செயல்பாடுகளை நெறிப்படுத்துகிறது மற்றும் செயல்திறனை மேம்படுத்துகிறது. உயர் தெளிவுத்திறன் காட்சி தெளிவான ஆபரேட்டர் தெரிவுநிலையை உறுதி செய்கிறது, அதே நேரத்தில் ஐஇசி 62443 இணக்கம் உட்பட வலுவான சைபர் பாதுகாப்பு, அச்சுறுத்தல்களிலிருந்து அமைப்புகளைப் பாதுகாக்கிறது.

சீமென்ஸ் லிமிடெட்டின் டிஜிட்டல் இண்டஸ்ட்ரீஸின் மோஷன் கன்ட்ரோல் தலைவர் விஜய் பிரதாப் சிங் பேசுகையில் "எங்கள் ஆற்றல்-திறனுள்ள வன்பொருள், செயல்பாட்டு தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவை இயந்திரக் கருவி உற்பத்தியில் நிலைத்தன்மையை அதிகரிப்பதற்கு முக்கியமானவை ஆகும். இம்டெக்ஸ் 2025 இல், அதிக ஆற்றல் திறன் மற்றும் குறைந்த கார்பன் யூடம் கொண்ட எங்கள் கூறுகளை மட்டுமல்லாமல், நுகரப்படும் ஆற்றலை ஈடு செய்ய, மீட்டெடுக்க மற்றும் கட்டுப்படுத்துவதற்கான பயன்பாடுகளையும் நாங்கள் காண்பிப்போம். இத்தகைய தடையற்ற போர்ட்ஃபோலியோ இயந்திரக் கருவி உற்பத்தியாளர்கள் மற்றும் பயனர்களின் செலவுகளைக் குறைக்கும் அதே வேளையில் குறைந்த வளங்களுடன் அதிக உற்பத்தித் திறன் கொண்டவர்களாகவும் இருக்க உதவுகிறது" என்று கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# உலகளவில் எரிசக்தி மாற்றாக சுரங்கத் துறையில் 1.7 டிரில்லியன் டாலர் முதலீடு தேவை; பிரியா அகர்வால் ஹெப்பர், எச்இசட்எல்



சென்னை, 28 ஜனவரி 2025: உலகின் எரிசக்தி மாற்றத்திற்காக சுரங்கத் துறையில் அமெரிக்க டாலர் மதிப்பில் 1.7 டிரில்லியன் முதலீடு தேவைப்படும் என்று இந்துஸ்தான் ஸின்க்கின் (ஜிங்க்) தலைவரும், வேதாந்தா லிமிடெட்டின் நிர்வாக இயக்குநருமான பிரியா அகர்வால் ஹெப்பர் தெரிவித்துள்ளார். டாவோஸில் நடந்த உலகப் பொருளாதார மன்றத்தில் பேசிய பிரியா, உலகளாவிய எரிசக்தி மாற்றத்தை இயக்குவதற்கான இந்தியாவின்

தனித்துவமான ஆற்றலையும் வலியுறுத்தினார். அமெரிக்கா, சீனா மற்றும் மத்திய கிழக்கு போன்ற நாடுகள் தங்கள் பொருளாதாரங்களுக்கு எரிபொருளாக இயற்கை வளங்களை விரிவாகப் பயன்படுத்தியுள்ள நிலையில், இந்தியா அதன் இருப்புக்களில் 15% க்கும் குறைவாகவே ஆராய்ந்துள்ளது என்றும் அவர் கூறினார். இது இந்தியா தனது வளத்தைத் திறந்து, சுத்தமான எரிசக்தியை நோக்கிய உலகளாவிய மாற்றத்திற்கு கணிசமாக பங்களிக்க ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

சுரங்கத் துறையைத் திறப்பதில் இந்திய அரசாங்கம் மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பாராட்டிய பிரியா, "இந்திய அரசாங்கம் ஏற்கனவே முக்கியமான கனிமத் தொகுதிகளை ஏலம் விடுவதன் மூலம் இந்த பகுதியில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இது ஏற்கனவே ஆறு தொகுதிகளுக்கு விருப்பமான ஏலதாரராக வேதாந்தா உருவெடுத்துள்ளது, இது இந்தத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழி வகுக்கிறது" என்றார்.

சுரங்க நடவடிக்கைகள் சுற்றுச்சூழலில் குறைந்தபட்ச அல்லது பூஜ்ஜிய தாக்கத்தை ஏற்படுத்துவதை உறுதி செய்ய மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நிலையான சுரங்கத்திற்கான வேதாந்தாவின் உறுதிப்பாட்டையும் அவர் வலியுறுத்தினார்.

"2050 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய கார்பனை அடைவதற்கான எங்கள் அர்ப்பணிப்பு ஒரு இலக்கு மட்டுமல்ல - இது எதிர்கால சந்ததியினருக்கு நாங்கள் வைத்திருக்கும் பொறுப்பு. எங்கள் மூன்று பெரிய நிறுவனங்களான இந்துஸ்தான் ஜிங்க், ஜிங்க் இன்டர்நேஷனல் மற்றும் கெய்ர்ன் ஆயில் & ணீனீஜீ; கேஸ் ஆகியவை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இந்த மைல்கல்லை எட்டும் என்பதில் நான் பெருமைப்படுகிறேன். புதுப்பிக்கத்தக்க ஆற்றலைத் தழுவி, 2030 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக பேட்டரியில் இயங்கும் தளவாடங்கள் உட்பட பேட்டரியில் இயங்கும் வாகனங்களை பயன்படுத்துவதன் மூலம், நிலைத்தன்மை கிரகத்திற்கு மட்டுமல்ல, நீண்டகால வணிக வளர்ச்சிக்கான புத்திசாலித்தனமான பாதையையும் நாங்கள் நிரூபிக்கிறோம். வேதாந்தாவில், லட்சியத்தை செயலாக மாற்ற நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்" என்று அவர் கூறினார்.

லித்தியத்திற்கு நிலையான மற்றும் செலவு குறைந்த மாற்றாக துத்தநாகம் (ஜிங்க்) அடிப்படையிலான பேட்டரிகளை உருவாக்குவதில் வேதாந்தாவின் திட்டங்கள் மற்றும் புதுமைகளை விவரித்த திருமதி பிரியா அகர்வால் ஹெப்பர், "இந்தப் பகுதியில் நாங்கள் ஏற்கனவே சில சோதனை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த துத்தநாக உற்பத்தியாளராக இந்துஸ்தான் துத்தநாகம்,

சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வுகளை வழங்குவதன் மூலம் எரிசக்தி சேமிப்பு சந்தையை சீர்குலைக்கக்கூடிய இந்த தொழில்நுட்பத்தை மேம்படுத்த ஐஐதி மற்றும் உலகளாவிய நிறுவனங்களுடன் சூத்துழைக்கிறது" என்றார்.

ஆண்டுதோறும் துத்தநாகம் மற்றும் வெள்ளி உற்பத்தியை 2 மில்லியன் டன்களாகவும், அலுமினிய உற்பத்தியை 4 மில்லியன் டன்களாகவும், கணிசமான மூலதன முதலீடுகள் மூலம் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியை இரட்டிப்பாக்குவது உட்பட பல செங்குத்துகளில் உற்பத்தியை இரட்டிப்பாக்கும் வேதாந்தாவின் லட்சியத் திட்டங்களை கோடிட்டுக் காட்டி அவர் முடித்தார்.

# நிதிச் சேர்க்கை மற்றும் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்த ஃபின்டெக் யாத்ரா உடன் பிஎச்ஐஎம் கூட்டு சேர்க்கிறது

சென்னை, 28 ஜனவரி 2025: என்பிசிஐ பிஎச்ஐஎம் சர்வீசஸ் லிமிடெட் (என்பிஎஸ்எல்) மூலம் இயக்கப்படும் இந்தியாவின் முதன்மையான டிஜிட்டல் செலுத்துதல் செயலியான பிஎச்ஐஎம், தி ஃபின்டெக் யாத்ரா 2025 உடன் முதன்மை கூட்டாளராக இணைந்துள்ளது. இந்த ஃபின்டெக் யாத்ரா என்பது இந்தியா முழுவதும் நிதிச் சேவைகளில் உள்ள வீரர்களை அடையாளம் கண்டு, புரிந்துகொள்வது மற்றும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட 10,000 கிமீ நீளமுள்ள வரலாற்று சாலைப் பயணமாகும். இந்த மூலோபாய ஒத்துழைப்பு சமூகங்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலமும், நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதன் மூலமும் இந்தியாவின் டிஜிட்டல் செலுத்துதல் புரட்சியை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த கூட்டாண்மையின் ஒரு பகுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட தனி நபர்களுக்கு, டிஜிட்டல் செலுத்துதல் விழிப்புணர்வை பரப்புவதற்கான அறிவு மற்றும் திறன்களுடன் அவர்களை சித்தப்படுத்துகின்ற ஒரு டிரெய்ன்-தி-ட்ரெய்னர் மாதிரியின் கீழ் பயிற்சி அளிக்கப்படும். அடிப்படை அளவில் பயிற்சியாளர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம், டிஜிட்டல் செலுத்துதல்களின் பலன்கள் நாட்டின் மிகவும் பின்தங்கிய மற்றும் தொலைதூரப் பகுதிகளை சென்றடைவதை இந்த முயற்சி உறுதி செய்கிறது.

இந்தக் கூட்டாண்மை குறித்து பேசிய என்பிஎஸ்எல் இன் தலைமை வணிக அதிகாரி ராகுல் ஹண்டா, "ஃபின்டெக் யாத்ரா 2025 உடனான பிஎச்ஐஎம் இன் கூட்டாண்மை டிஜிட்டல் இடைவெளியைக் குறைப்பதற்கும் பாதுகாப்பான மற்றும் பயனுள்ள டிஜிட்டல் செலுத்துதல் தீர்வுகளைப் பற்றி குடிமக்களுக்குக் கற்பிப்பதற்குமான ஒரு முக்கியமான முயற்சியாக இருக்கிறது.

இந்த முன்முயற்சியானது, ஒரு நிதி உள்ளடக்கிய மற்றும் டிஜிட்டல் அதிகாரம் பெற்ற இந்தியாவை உருவாக்கும் எங்கள் நோக்கத்துடன் ஒத்துப்போகிறது. ஃபின்டெக் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்த இந்த கூட்டாண்மை கொண்டு வரும் வாய்ப்புகள் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடை கிறோம்." என்றார்.

ஃபின்டெக் யாத்ரா 2025 என்பது இந்தியாவை டிஜிட்டல் முறையில் சுதந்திரமாக்குவதற்கான ஒரு இயக்கமாகும். இது தொடக்க நிறுவனங்கள் போன்ற புதுமை வழங்குநர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள், துணிகர முதலீட்டாளர்கள் மற்றும் பெரிய கார்ப்பரேட்கள் போன்ற புதுமை தேடுபவர்களுக்கு இடையே இணைப்பை செயல்படுத்தும் ஒரு தளமாகும்.

பல நகரங்களுக்குச் செல்வதன் மூலமும், ஃபின்டெக் கண்டுபிடிப்பாளர்களுடன் ஈடுபடுவதன் மூலமும், பிஎச்ஐஎம் போன்ற தளங்களுடன் ஒத்துழைப்பதன் மூலமும், நாடு முழுவதும் தடையற்ற மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் செலுத்துதல்களை ஏற்றுக்கொள்வதை அதிகரிக்க இந்த யாத்ரா திட்டமிடப்பட்டுள்ளது.

தி ஃபின்டெக் ணிட்அப் இன் நிறுவனர் அபிஷாந்த் பந்த் மேலும் கூறுகையில், "பிஎச்ஐஎம் உடனான எங்கள் கூட்டாண்மை இந்த ஆண்டின் யாத்ரா வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் அம்சமாக இருக்கிறது.

யுபிஐ சுற்றுச்சூழலில் பிஎச்ஐஎம் இன் நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவம், நிதி உள்ளடக்கம் என்பது ஒரு பார்வை மட்டுமல்ல, நாடு முழுவதும் உள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு ஒரு யதார்த்தம் என்பதை உறுதி செய்கிறது. ஒன்றாக, டிஜிட்டல் பொருளாதாரத்தை தழுவுவதற்கு ஒவ்வொரு இந்தியருக்கும் அதிகாரம் அளிப்பதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

எங்களின் முயற்சியானது துவக்க நிலை ஃபின்டெக் நிறுவனர்களை யோசனை சரிபார்ப்பு, நெட்வொர்க் ஆதரவு மற்றும் துணிகர மூலதனத்தைச் சுற்றி வழிகாட்டுதல் ஆகியவற்றுடன் ஆதரிப்பதாகும், இதனால் அவர்கள் நிதிச் சேவைகளில் அதிக டிஜிட்டல் ஏற்றுக்கொள்ளலுக்கு ஒரு ஊக்கியாக செயல்படுகின்றனர்." என்று கூறினார்.

# ஓட்டேரி மற்றும் குமரன்நகர் பகுதிகளில் சட்டவிரோதமாக மது பாட்டில்களை விற்பனை செய்த 4 நபர்கள் கைது. 40 மதுபாட்டில்கள் மற்றும் பணம் ரூ.1,000/- பறிமுதல்

சென்னை, 28 ஜனவரி 2025: சென்னையில் போதை பொருட்கள் மற்றும் மதுபாட்டில்களை சட்டவிரோதமாக பதுக்கி வைத்து விற்பனை செய்பவர்களை கண்டறிந்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவிட்டதின் பேரில், காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல்குழுவினர் தங்களது காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தீவிரமாக கண்காணித்து சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களை கைது செய்து வருகின்றனர்.

இதன்தொடர்ச்சியாக, பி-2 ஓட்டேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படையினர் 26.01.2025 அன்று காலை, ஓட்டேரி, சேமாத்தம்மன் காலனி

1வது தெரு, சிஒய்எஸ் ரோடு சந்திப்பில் கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்த 1.பிரசாந்த், வ/27, த/பெ.அன்பு, சேமாத்தம்மன் கோயில் 2வது தெரு, சென்னை, 2.விநாயகமூர்த்தி, வ/49, த/பெ.நாராயணசாமி, சுப்புலட்சுமி நகர், கொரட்டூர், சென்னை ஆகிய 2 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 180 மி.லி. அளவு கொண்ட 25 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

மேற்படி கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணைக்குப் பின்னர் 26.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேபோல, ஆர்-6 குமரன் நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் 26.01.2025 அன்று இரவு, மேற்கு சைதாப்பேட்டை, மேற்கு ஜோன்ஸ் ரோட்டில் உள்ள மதுபான கடை அருகே கண்காணித்து, அங்கு சட்ட விரோதமாக மதுபாட்டில்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்த 1.பாலசுப்பிரமணி, வ/41, த/பெ.ராமு, பாப்பாஊரணி தெரு, செஞ்சை பள்ளிவாசல், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம், 2.சுரேஷ், வ/25, த/பெ.பால்ராஜ், நெட்டேந்தல் தெரு, நெய்வயல் போஸ்ட், திருவாடனை தாலுகா, ராமநாதபுரம் மாவட்டம் ஆகிய 2 நபர்களை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 180 மி.லி. அளவு கொண்ட 15 மதுபாட்டில்கள் மற்றும் பணம் ரூ.1,000/- பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணைக்குப் பின்னர் 27.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

# எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் தமிழ்ப்பேராயம் ஒருங்கிணைக்கும் சொல் தமிழா சொல் 2025

சென்னை, 28 ஜனவரி 2025: எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத் தமிழ்ப்பேராயம் எஸ்.ஆர்.எம். கல்விநிறுவன வேந்தர் டாக்டர் தா. இரா. பாரிவேந்தர் அவர்களால் 2010 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்ப்பேராயம் தலைசிறந்த எண்ணற்ற தமிழ்ப்பணிகளை ஆற்றிவருகிறது. யூமிழ் அருட்சுனைஞர் சான்றிதழ்ப் படிப்பு, வள்ளலார் சான்றிதழ்ப் படிப்பு முதலானவற்றோடு பல இலட்சம் மதிப்பிலான தமிழ்ப்பேராய விருதுகள் வழங்குதல், அரிய நூல்களை வெளியிடுதல், பன்னாட்டு, தேசிய மாநாடுகளை ஒருங்கிணைத்தல் எனப் பல்வேறு சிறந்த பணிகளை ஆற்றிவருகிறது. தமிழ்ப்பேராயம் வழி மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்த பல ஆயிரம் மாணவர்களைக் கொண்ட பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது.

அரும்பணிகள் பல ஆற்றிவரும் தமிழ்ப்பேராயம் இதன் தொடர்ச்சியாக கல்லூரி மாணவர்களுக்கான பேச்சாற்றலை அங்கீகரிக்கும் நோக்கத்தில் சொல் தமிழா சொல் 2025 என்னும் தலைப்பில் மிகப் பிரம்மாண்டமான பேச்சுப்போட்டியைத் தற்போது ஏற்பாடு செய்துள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியை உள்ளடக்கி 9 மண்டலங்களாகப் பிளீக்கப்பட்டு இப் பேச்சுப் போட்டி பல்வேறு கல்லூரிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டது.

முதல் மண்டலமாக சென்னை மண்டலத்திற்கான பேச்சுப் போட்டி காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

500க்கும் மேற்பட்ட மாணவர்கள், 15க்கும் மேற்பட்ட நடுவர்கள் என மிகப் பிரம்மாண்டமாகச் சென்னை மண்டலப் போட்டி நடைபெற்றது.



பல சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றிபெற்றவாகன விவரம் பின்வருமாறு

1. முதல் பரிசு - 1,00,000 ரூபாய் - எஸ். பாண்டி கணேஷ், சென்னை கிறிஸ்தவ கல்லூரி
2. இரண்டாம் பரிசு - 75,000 ரூபாய் - இல. சஞ்சனா, செண்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி
3. மூன்றாம் பரிசு - 50,000 ரூபாய் - சு. சதீஸகுமார், சென்னை பல்கலைக்கழகம்

சென்னை மண்டலப் போட்டியின் இறுதிச்சுற்று நடுவர்களாகப் பேராசிரியர் அரங்க இராமலிங்கம், பேராசிரியர் விமலா அண்ணாதுரை ஆகியோர் பங்கேற்று வெற்றியாளர்களைத் தெரிவுசெய்தனர்.

இப்போட்டியில் வெற்றிபெற்றோருக்குச் சான்றிதழ்களை கரு. நாகராஜன் பிரெசிடென்ட் தமிழ்ப்பேராயம் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். வெற்றியாளர்களில் முதல் நால்வர் மாநில அளவிலான இறுதிப்போட்டியில் பங்கேற்கத் தகுதி பெறுவர்.

போட்டிகளில் வென்றோருக்கான பரிசுத்தொகை மாநில அளவிலான இறுதிப்போட்டி அன்று வழங்கப்படும்.

அடுத்த வேலூர் மண்டலத்திற்கான போட்டி 02.02.2023 அன்று திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



சென்னை, 28 ஜனவரி 2025: தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக மக்களவை & மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 29.01.2025 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அப்போது, கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் ; ஒன்றிய அரசின் 2025 - 26 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.

"அண்ணா அறிவாலயம்", சென்னை - 600018. நாள் - 27.01.2025.

தமிழ் மக்கள் குரல்
உள்ளது உள்ளபடி
செவ்வாய்,
ஜனவரி 28, 2025

# தனது இந்திய துணை நிறுவனமான எபிக்ஸ்கேஷ் - ன் டிராவல் டிவிஷன் - ன் சிறப்பான செயல்பாட்டை அறிவிக்கும் இராயா லைஃப்ஸ்பேசஸ்! 10,030 மில்லியன் ஜி எம் வி மற்றும் 75 மில்லியன் எபிட்டா உடன் புதிய சாதனை

சென்னை, 28 ஜனவரி 2025: இராயா லைஃப்ஸ்பேசஸ் லிமிடெட், தனது வளர்ச்சிப் பயணத்தில் ஒரு முக்கிய முன்னேற்றமாக அதன் இந்திய துணை நிறுவனமான எபிக்ஸ்கேஷ், எட்டியிருக்கும் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் சாதனையை அறிவிப்பதில் உற்சாகம் கொள்கிறது. எபிக்ஸ்கேஷ் - ன் டிராவல் டிவிஷனான எபிக்ஸ் டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஈடிபிஎல்), 2024 டிசம்பரில் முடிவடைந்த காலாண்டில், சிறப்பாக செயல்பட்டிருக்கிறது. மொத்த மெர்கண்டைஸ் மதிப்பாக ரூ.1300 கோடியையும் மற்றும் நிகர வருவாயாக ரூ.111 கோடியையும் மற்றும் 7.5 கோடி என்ற ஆரோக்கியமான எபிட்டா - ஐயும் இக்காலாண்டில் இது பெற்றிருக்கிறது. இதன் முக்கியப் பிரிவுகள் மத்தியில் கார்ப்பரேட் டிராவல், எம் ஐ சி ஈ (கூட்டங்கள், ஊக்கத்தொகைகள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள்), சொகுசு வசதி இரயில்கள் மற்றும் ஸ்விஸ் சுற்றுலா ஆகியவற்றை உள்ளடக்கிய மெர்க்குரி டிவிஷன் ரூ.58.53 கோடி வருவாயையும், ரூ.2.37 கோடி ரூபாய் எபிட்டா - ஐயும் பெற்றிருக்கிறது. வலுவான கார்ப்பரேட் மற்றும் எம் ஐ சி ஈ முன்பதிவுகளின் மூலம் சாத்தியமான இவ்வெற்றியானது, இப்பிரிவுகளில் நிலவுகின்ற வலுவான தேவைப்பாட்டை சுட்டிக்காட்டுகிறது. சொகுசு வசதி கொண்ட ஆடம்பர இரயில் பிரிவில், பருவகால தன்மை காரணமாக, இலாப வரம்பில் பாதிப்புகள் இருந்த போதிலும், டெக்கான் ஒடிசி ரூ.11.23 கோடி வருவாய் பங்களிப்பை வழங்கியிருக்கிறது. கூடுதலாக, சுவிஸ் டிராவல் பீரோ ஜி எம் பி எச் உடன் இணைந்து, வசதியான அமெரிக்க வாடிக்கையாளர்களை இலக்காக கொண்டிருக்கும் பிற சொகுசு வசதி இரயில் சேவைகளும், ரூ.53.7 கோடி வருவாயுடன் நல்ல பங்களிப்பை தந்திருக்கிறது. ஆன்லைன் டிராவல் முகமையான via.com, கலவையான பிராந்திய செயல்திறனை வெளிப்படுத்தியிருக்கிறது. ரூ.8.68 கோடி வருவாயை இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்சில் திரட்டி, வலுவான இலாபமீட்டல் நிலையை இது வெளிப்படுத்தியிருக்கிறது.

அடுத்த காலாண்டில் நேர்மறையான எபிட்டா - ஐ சிங்கப்பூர் உருவாக்கும் மற்றும் இதன்மூலம் ஏஷியான் பிராந்தியத்தில் எபிக்ஸ்கேஷ் - ன் செயலிருப்பை இது மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்து, ஜி எம் வி - ல் ரூ.811.74 கோடி என்ற பங்களிப்பை வழங்கியிருக்கின்றன. இதன்மூலம் இந்நிறுவனத்தின் கணிசமான, பிராந்திய அளவிலான செயல்தடத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. புதிதாக ஒன்பது கார்ப்பரேட் வாடிக்கையாளர்கள் இணைந்திருப்பது எபிக்ஸ்கேஷ் - ன் தொடர்ச்சியான வெற்றியைக் குறிக்கிறது. வருடாந்திர அளவில் 58 கோடி ரூபாயை புதிய வாடிக்கையாளர்கள் வருவாயாக வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஐந்து பெரிய கார்ப்பரேட் வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படும் பணி விரைவில் நிறைவடையவிருக்கிறது. இந்த புதிய நிகழ்வுகள், எபிக்ஸ்கேஷ் - ன் செயல்திட்டங்களின் மீது வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் மற்றும் இந்நிறுவனத்தின் வளர்ந்து வரும் ஆற்றலையும் முன்னிலைப்படுத்துகின்றன.

# நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜோதிமணி, இந்துஸ்தான் கோகோ கோலா பானங்கள் (எச் சி சி பி) தண்ணீர் ஏடிஎம் மற்றும் கரூர் மற்றும் புதுக்கோட்டையில் அங்கன்வாடி சீரமைப்பு ஆகியவற்றை தொடங்கி வைத்தார்



திருச்சி, 28 ஜனவரி 2025: இந்துஸ்தான் கோகோ கோலா பீவரேஜஸ் (எச் சி சி பி), தமிழ்நாட்டின் கரூர் மற்றும் புதுக்கோட்டையில் அதன் கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு (சி எஸ் ஆர்) திட்டத்தின் ஒரு பகுதியாக பல சமூகத்தை மையமாகக் கொண்ட முயற்சிகளைத் தொடங்குவதாக இன்று அறிவித்தது. இந்நிகழ்ச்சியை கரூர் மக்களவைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி எஸ். ஜோதிமணி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் எம்.அருணா மற்றும் ஆலங்குடி கிராம ஊராட்சியின் சித்தாம்பூர் குக்கிராமத்தின் விராலிமலை வட்டார ஆணையர் மற்றும் வளர்ச்சி அலுவலர் எஸ். பார்த்திபன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சித்தாம்பூர் குக்கிராமத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள குடிநீர் ஏடிஎம் கிராம மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, பாதுகாப்பான குடிநீர் பெறுவதற்கு வழிவகை செய்யும். கூடுதலாக, அங்கன்வாடி மையம், கோட்டைக்காரன்பட்டி குக்கிராமம், விராலிமலை வட்டம், புதுக்கோட்டை மாவட்டம், அருகிலுள்ள 1 கி.மீ தொலைவில் அமைந்துள்ள அங்கன்வாடி சமூகத்திற்கு அர்ப்பணிக்கப்படும். இந்த பிராந்தியம் சார்ந்த திட்டங்கள் அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் கிராமப்புறங்களில் வளர்ச்சியை வளர்ப்பதற்கும் எச் சி சி பி இன் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

நிகழ்ச்சியில் பேசிய கரூர் மக்களவைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜோதிமணி, "தமிழ்நாட்டின் கிராமப்புறங்களை மேம்படுத்துவதில் எச்.சி.சி.பி போன்ற அமைப்புகளின் முயற்சிகள் உண்மையிலேயே பாராட்டத்தக்கவை. பள்ளிகளுக்கு டிஜிட்டல் ஸ்மார்ட் போர்டுகளை வழங்குவதன் மூலமும், பெண்களுக்கு டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவிப்பதன் மூலமும், நமது மாநில அரசுடன் இணைந்து திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் திறன் இடைவெளியைக் குறைப்பதன் மூலமும், அவை அடிமட்ட மக்களின் வாழ்க்கையில் உறுதியான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அவர்களின் முன்முயற்சிகள் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களுக்கான தமிழக அரசின் பார்வையுடன் சரியாக ஒத்துப்போகின்றன, குறிப்பாக டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் திறன் மேம்பாடு மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்த நிகழ்ச்சியில் கருத்து தெரிவித்த எச் சி பி இன் தலைமை பொது விவகாரங்கள், தகவல் தொடர்பு மற்றும் நிலைத்தன்மை அதிகாரி ஹிமான்ஷு பிரியதர்ஷி, "எச் சி சி பி இல், சமூகங்களின் மிக முக்கியமான தேவைகளை நிவர்த்தி செய்யும் முயற்சிகள் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் நாங்கள் நம்புகிறோம். உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், பாதுகாப்பான குடிநீர் அணுகல், திறன் மேம்பாடு மற்றும் மக்கள் சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்கான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்க டிஜிட்டல் கல்வியை செயல்படுத்துவதன் மூலம், எங்கள் முயற்சிகள் அர்த்தமுள்ள, நீண்டகால மாற்றத்தைக் கொண்டுவர வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த திட்டங்களின் அர்ப்பணிப்பு எங்கள் சமூகங்களின் எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கும், செழிப்பான, வளமான தமிழ்நாட்டிற்கு பங்களிப்பதற்கும் நாங்கள் அளித்த வாக்குறுதியை பிரதிபலிக்கிறது.

கூடுதலாக, எச் சி சி பி சமூகத்தில் உள்ள பெண்களின் திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை ஆதரிக்க 10 தையல் இயந்திரங்களை விநியோகித்தது. மேலும், அடுத்த மாதத்திற்குள் தமிழ்நாட்டின் புதுக்கோட்டை, விராலிமலை வட்டாரம், கோட்டைக்காரன்பட்டி குக்கிராமத்தில் புதிய வாட்டர் ஏடிஎம் நிறுவுதல், முஸ்லிம் ஓரியண்டல் தொடக்கப்பள்ளி, செவலூர், மணப்பாறை, கரூர், யூனியன் மிடல் பள்ளி, குரும்பப்பட்டி, கடவூர், கரூர் மற்றும் சின்ன மூக்கனாங்குறிச்சியில் உள்ள பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியில் மூன்று டிஜிட்டல் ஸ்மார்ட் போர்டுகளை வெற்றிகரமாக நிறுவுதல் தந்தோணி வட்டம், கரூர் கலந்துரையாடல் கற்றல் அனுபவங்களை மேம்படுத்துதல். உள்ளிட்ட கூடுதல் திட்டங்களை நிறுவனம் அறிவித்தது.

# சாம்சங் இந்தியா கேலக்ஸி எஸ் 25 தொடரை அறிமுகப்படுத்துகிறது, இது உங்கள் உண்மையான ஏஐ துணை; அற்புதமான சலுகைகளுக்குஇப்போது முன்கூட்டியே ஆர்டர் செய்யுங்கள்



கோயம்புத்தூர், 28 ஜனவரி 2025: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், வாடிக்கையாளர்கள் அதன் சமீபத்திய கேலக்ஷி எஸ் 25 அல்ட்ரா, கேலக்ஷி எஸ்25+ மற்றும் கேலக்ஷி எஸ்25 ஸ்மார்ட்போன்களை முன்கூட்டியே ஆர்டர் செய்யலாம் என்று இன்று அறிவித்துள்ளது, இது சாம்சங்கின் மிகவும் இயற்கையான மற்றும் சூழல்-விழிப்புணர்வு மொபைல் அனுபவங்களுடன் உண்மையான ஏஐ தோழராக புதிய தரத்தை அமைக்கிறது.

கேலக்ஷி எஸ்25 தொடர், ஏஐ முகவர்கள் மற்றும் மல்டிமாடல் திறன்களை தடையின்றி ஒருங்கிணைப்பதன் மூலம் ஒவ்வொரு தொடுபுள்ளியிலும் பயனர்கள் தொடர்பு கொள்ளும் முறையை மாற்றுவதற்கான சாம்சங்கின் பார்வையின் முதல் படியைக் குறிக்கிறது. கேலக்ஸி சிப்செட்டிற்கான முதல் வகையான தனிப்பயனாக்கப்பட்ட ஸ்னாப்டிராகன்டி 8 எலைட் மொபைல் பிளாட்ஃபார்ம், கேலக்ஸி ஏஐக்கு அதிக ஆன்-டிவைஸ் செயலாக்க சக்தியையும், கேலக்ஸியின் அடுத்த ஜென் புரோவிஷுவல் எஞ்சினுடன் சிறந்த கேமரா வரம்பு மற்றும் கட்டுப்பாட்டையும் வழங்குகிறது.

“சாம்சங் கடந்த ஆண்டு கேலக்ஷி ஏஐ அறிமுகப்படுத்தியதன் மூலம் மொபைல் ஏஐ இன் சகாப்தத்தை வெளியிட்டது. உங்கள் உண்மையான ஏஐ துணையான கேலக்ஷி எஸ்25 தொடருடன் கேலக்ஷி ஏஐ இன் அடுத்த அத்தியாயத்தை இப்போது திறக்கிறோம். கேலக்ஷி எஸ்25 தொடர் உங்களுக்கு மிகவும் சூழல்-விழிப்புணர்வு, தனிப்பயனாக்கப்பட்ட ஏஐ ஐக் கொண்டு வருகிறது, இதன் மூலம் தனிப்பட்ட தனியுரிமை உறுதி செய்யப்பட்டு வடிவமைக்கப்பட்ட, செயல்படக்கூடிய நுண்ணறிவுகளைப் பெறலாம். புதிய கேலக்ஸி எஸ் 25 தொடர் எங்கள் நொய்டா தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் என்பதை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்” என்று சாம்சங் தென்மேற்கு ஆசியாவின் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ஜேபி பார்க் கூறினார்.

கேலக்ஷி எஸ்25 தொடர் என்பது ஒன் யுஐ 7 உடன் வரும் முதல் ஸ்மார்ட்போன் தொடராகும், இது சாம்சங்கின் ஏஐ-முதல் இயங்குதளமாகும், இது மிகவும் உள்ளுணர்வு கட்டுப்பாடுகளை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது, இது ஏஐ-இயங்கும் தனிப்பயனாக்கப்பட்ட மொபைல் அனுபவங்களை செயல்படுத்துகிறது. மல்டிமோடல் திறன்களைக் கொண்ட ஏஐ முகவர்கள் கேலக்ஷி எஸ்25 தொடரை உரை, பேச்சு, படங்கள் மற்றும் வீடியோக்களை இயற்கையாக உணரும் தொடர்புகளுக்கு விளக்க உதவுகின்றன. கேலக்ஸி எஸ்25 தொடர் மூலம், அடுத்த படிகளுக்கான சூழல்-விழிப்புணர்வு பரிந்துரைகளுடன் செயல்படக்கூடிய தேடல்களையும் செய்யலாம்.

கூடுதலாக, ஜிஐஎஃப் ஐப் பகிர்வது அல்லது நிகழ்வு விவரங்களைச் சேமிப்பது போன்ற விரைவான பின்தொடர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்பாடுகளுக்கு இடையில் மாறுவது உராய்வு இல்லாதது. இந்த ஸ்மார்ட் போன்கள் இயற்கையான மொழி புரிதலில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கின்றன, அன்றாட தொடர்புகளை எளிதாக்குகின்றன. சாம்சங் கேலரியில் ஒரு குறிப்பிட்ட புகைப்படத்தைக் கேட்டு உள்ளுணர்வாகக் கண்டறியவும் அல்லது அமைப்புகளில் காட்சி எழுத்துருக்களின் அளவை சரிசெய்யவும்.

ஜெமினியைச் செயல்படுத்த பக்க பொத்தானை அழுத்திப் பிடிக்கவும், சாம்சங் மற்றும் கூகிள் பயன்பாடுகள் மற்றும் ஸ்பாடிஃபை போன்ற மூன்றாம் தரப்பு பயன்பாடுகள் முழுவதும் தடையற்ற தொடர்புகளைச் செய்யவும். எடுத்துக்காட்டாக, உங்களுக்குப் பிடித்த விளையாட்டுக் குழுவின் சீசன் அட்டவணையைக் கண்டுபிடித்து அதை சாம்சங் காலண்டர் இல் சேர்க்கவும் - ஒற்றை கட்டளையுடன்.

கேலக்ஷி எஸ்25 தொடர் தகவல் தொடர்பு, உற்பத்தித் திறன் மற்றும் படைப்பாற்றலுக்கான கேலக்ஷி ஏஐ இன் பிரபலமான கருவிகளில் பலவிதமான மேம்படுத்தல்களைக் கொண்டுவருகிறது.

தேடலுக்கான கூகிளின் வட்டம் இப்போது உங்கள் திரையில் உள்ள தொலைபேசி எண்கள், மின்னஞ்சல் மற்றும் யுஆர்எல் களை விரைவாக அங்கீகரிக்கிறது. உங்கள் அழைப்புகள் அழைப்பு டிரான்ஸ்கிரிப்ட் மற்றும் சுருக்கத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. எழுத்து உதவி மூலம், நீங்கள் உள்ளடக்கத்தை சுருக்கலாம் அல்லது குறிப்புகளை தானாக வடிவமைக்கலாம். வரைதல் உதவி ஓவியங்கள், உரை அல்லது படத் தூண்டுதல்களின் சேர்க்கைகள் மூலம் யோசனைகளை உயிர்ப்பிப்பதற்கான புதிய வழிகளைத் திறக்கிறது.

தனியுரிமை பாதுகாக்கப்பட்ட ஹைப்பர்-தனிப்பயனாக்கப்பட்ட அனுபவங்கள் கேலக்ஷி எஸ்25 தொடர் உங்கள் விருப்பத்தேர்வுகள் மற்றும் பயன்பாட்டு முறைகளை பிரதிபலிக்கும் மிகவும் வடிவமைக்கப்பட்ட அனுபவங்களை வழங்க சாதனத்தில் உங்கள் தரவை பாதுகாப்பாக பகுப்பாய்வு செய்வதன் மூலம் தனிப்பயனாக்கப்பட்ட ஏஐ அம்சங்களுக்கான தனிப்பட்ட தரவு பொறியுடன் வருகிறது.

இந்த நுண்ணறிவுகள் இயற்கையான மொழியைப் பயன்படுத்தி கேலரியில் பழைய புகைப்படத்தைத் தேடுவது அல்லது நவ் பிரீஃப் மூலம் நாள் முழுவதும் வழிநடத்தப்படுவது போன்ற வடிவமைக்கப்பட்ட அனுபவங்களை செயல்படுத்துகின்றன, இது பூட்டுத் திரையில் நவ் பார் 8 வழியாக அணுகக்கூடிய பரிந்துரைகளை முன்கூட்டியே வழங்குகிறது.

# சிந்தாதிரிப்பேட்டை பகுதியில் நிறுத்தியிருந்த லோடு ஆட்டோவை திருடிச் சென்ற நபர் கைது. ஆட்டோ மீட்பு.



சென்னை, 28 ஜனவரி 2025: சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, அருணாச்சலம் தெருவில் வசித்து வரும் விஜயசேகர், வ/64, த/பெ.துரைராஜ் என்பவர் மேற்படி தனது வீட்டின் கீழ்தளத்தில் நியூஸ் பேப்பர் கடை வைத்து நடத்தி வருகிறார்.

இவர் கடந்த 21.01.2025 அன்று இரவு மேற்படி நியூஸ் பேப்பர் கடையின் முன்பு அவரது லோடு ஆட்டோவை நிறுத்திவிட்டு, சுமார் 1 மணி நேரம் கழித்து வந்து பார்த்தபோது, அவரது லோடு ஆட்டோ திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து விஜயசேகர், எஃப்-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

எஃப்-1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி லோடு ஆட்டோவை திருடிச் சென்ற சூர்யா, வ/36, த/பெ.பிரபு, வீரப்பா செட்டி தெரு, புளியந்தோப்பு, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் லோடு ஆட்டோ மீட்கப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட சூர்யா மீது ஏற்கனவே 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி சூர்யா விசாரணைக்குப் பின்னர் 26.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.